செ.வெ.எண்: 16 நாள்:07.09.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளுர் ஒன்றியம் தனியார் திருமண மண்டபத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை இணைந்து வட்ட அளவிலான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளுர் ஒன்றியம் தனியார் திருமண மண்டபத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை இணைந்து வட்ட அளவிலான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.09.2021) நடைபெற்றது.

நாகப்பட்டினம் மாவட்டத்திற்குட்பட்ட வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் மற்றும் திட்டங்கள் தொடர்பாக துறைகளை ஒருங்கிணைத்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய்த்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, நேரடி கொள்முதல் நிலையம், நில உரிமை மாற்றம், நிலப்பரிமாற்றம், நிலக்குத்தகை, SECC Data, பேரிடர் மேலாண்மை போன்றவைகளும் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் ஊராட்சி வாரியம் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம் (PMAY), கொரோனா தடுப்பூசி போன்றவைகள் குறித்தும், அதற்குரிய சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுக் கூட்டத்தில் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தின் தொடர்ச்சியாக மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த தேசிய அடையாள அட்டை (UDID) வழங்க விண்ணப்பங்கள் சேகரிப்பது குறித்தும், பொதுமக்கள் விண்ணப்பிக்கும் சான்றிதழ்களை உடனுக்குடன் வழங்குவது குறித்தும் கிராம நிர்வாக அலுவலாகள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் ஆகியோருடன் கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பே.பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.ஷகிலா, கீழ்வேளுர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள்

திரு.வெ.தியாகராஜன், லெ.இராஜகோபால், வட்டாச்சியர் திரு.மாரிமுத்து மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**